1972 ஏப்ரல் 1]

மாண்புமிகு திரு. செ. மாதவன் : கூட்டுறவுத் தொழிற்சாலைகள் வர வேண்டும் என்பது நம்முடைய கொள்கை. இலாபத்தை மட்டும் கருதாது, இலாபம் ஒருவருக்கு மட்டுமே போகாமல் பல பேர்களுக்குப் பங்கிடப்படுகிறது என்ற முறையில் கூட்டுறவுத் துறை நன்றாக நடைபெறுவதற்கு முயற்சி எடுக்கப்பட்டு வருகிறது.

திரு. த. சோனையா : அமைச்சர் அவர்கள் ராமனாதபுரம் மாவட்டத்தில் மூன்று தீப்பெட்டித் தொழிற்சாலைகள் இருப்பதாகச் சொன்னார்கள். அதில் கிழக்கு ராமனாதபுரத்தில் ஏதேனும் தொழிற்சாலை இருக்கிறதா? அப்படியில்லை என்றால், கிழக்கு ராமனாதபுரத்தில் தீப்பெட்டித் தொழிற்சாலை ஆரம்பிக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : கிழக்கு ராமனாதபுரத்தில் ஒரு தொழிற்சாலை ஏற்படுத்த உறுப்பினர் அவர்கள் முயற்சிப்பார்களேயானால், அரசாங்கம் உதவி செய்யும்.

பாய் நெய்பவர்களுக்கு இயந்திரங்கள்

* 826 வினா.—திரு. கே. ஏ. வகாப் : மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வந்தவாசி மத்திய பாய் நெசவாளர் கோரை உற்பத்தியாளர் தொழில் கூட்டுறவுச் சங்கத்திற்கு ஜப்பானிய பாய் நெய்யும் மிஷின்களை வாங்கி அளிக்கும் செயற்குறிப்பு ஏதேனும் அரசிடம் உள்ளதா?

(இ) ஆம் எனில், எப்போது அளிக்கப்படும்?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) இல்லை.

(இ) இவ் வினாவிற்கு இடமில்லை.

அணைக்கரை—கொள்ளிடம் சாலை

* 827 வினா.—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

அணைக்கரையிலிருந்து கொள்ளிடம் வரை உள்ள கரையை அகலப்படுத்தி, பஸ், லாரி போக்குவரத்துக்குப் பயன்படும்படி செய்ய அரசு உத்தேசித்துள்ளதா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : ஆம்.

திரு. என். கிட்டப்பா : தலைவர் அவர்களே, அணைக்கரையிலிருந்து கொள்ளிடத்திற்குத் தெற்குக் கரை வழியாகக் கொள்ளிடம் என்று அழைக்கப்படுகிற அணைக்காரன்சத்திரம் பாதையைச் செம்மைப்படுத்தித் தருவதன் மூலம்

[1972 ஏப்ரல் 1

மிக அதிகமான கிராமங்களில் போக்குவரத்து வசதி ஏற்படும். அமைச்சர் அவர்கள் 'ஆம்' என்று பதில் கூறியதற்கு நன்றி கூறி, அதற்கு எவ்வளவு மதிப்பீடு என்பதை அறிவிக்க முடியுமா? எப்பொழுது செயல்படுத்த வேலேகள் துவங்கப்படும் என்பதையும் அறிவிக்க இயலுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: 24 மைல் நீளம் உள்ள இந்தச் சாலே அமைப்பதற்கு ரூ. 60 லட்சம் மதிப்பீடு போடப்பட்டிருக்கிறது. இன்டென்சிவ் அக்ரிகல்சரல் டெவலப்மெண்டு ப்ரோகிராம்—தீவிர சாகுபடித் திட்டத்தின்—கீழ் இதுபற்றி அரசாங்கத்திற்குச் செயற்குறிப்பு அனுப்பப்பட்டு அரசாங்கத்தின் ஆய்வில் இருந்து வருகிறது.

நாகநதி ஆற்றின் குறுக்கே அணே

*** 828 வின.—திரு. தோப்பூர் திருவேங்கடம்:** மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினவுக்கு விடையளிப்பாரா—

வட ஆர்க்காடு மாவட்டத்தில் வேலூர் தாலுக்கா, கனியம்பாடி தொகுதியில் உள்ள நாகநதி ஆற்றில் (கீழரசம்பமடு கிராமத்துக்கு அருகில் உள்ளது) சிறு பாசனத் திட்டத்தின் கீழ் அணே ஒன்று கட்டப்படும் செயற்குறிப்பு ஏதேனும் அரசின் பரிசீலனேயில் உள்ளதா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: ஆம்.

கோவை நகரில் உள்ள சிறப்பங்காடிகள்.

*** 829 வின—திரு. என். மருதாசலம்:** மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை நகரில் தற்போது சூப்பர் மார்க்கெட்டுகள் எத்தனே உள்ளன?

(இ) அவைகளில் எத்தனே தாழ்த்தப்பட்ட ஆண்/பெண் பணியாளர்கள் உள்ளனர்?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர்: (அ) ஒன்று.

(இ) ஆண் 6, பெண் இல்லே.

திரு. என். மருதாசலம்: தலேவர் அவர்களே, சூப்பர் மார்கெட்டுகள் அரசாங்கத்தின் அனுமதியின் பேரில் நடைபெறுகின்றன. சூபர் மார்கெட்களில் அரிசனங்களே 100-க்கு 18 பேர்கள் எடுக்க வேண்டும் என்று அரசு உத்தரவிடுமா? அப்படி எடுக்காவிட்டால் சூபர் மார்கெட்டுக்கு அனுமதி கொடுப்பதற்கு அரசு மறுக்குமா?